# தடைசெய்யப்பட்ட திட்டங்களுக்கு எதிர்ப்பைக் காட்டி கடினமாக உழைத்துப் பெற்ற உங்கள் பணத்தை பாதுகாருங்கள்!

பொதுமக்களின் நலன் கருதி
இலங்கை மத்திய வங்கியினால்
வெளியிடப்பட்டது.

## தடைசெய்யப்பட்ட திட்டம் என்றால் என்ன?

★ தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப்படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள்,

- திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல், அல்லது
- பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல்

என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.

★ இது ஒரு பிரமிட் வடிவமாக இருப்பதுடன் ஒவ்வொரு பங்குபற்றுனரும் பிரமிட் கட்டமைப்பில் அவரின் கீழ் மேலதிக அங்கத்தவர்களை கொண்டுவருவார்கள். இத்திட்டத்தில் இணைவதற்கு பங்கேற்பவர்கள்

- மருந்து வகைகள்/உபகரணங்கள்/தங்க நாணயங்கள்/ அழகு சாதனங்கள்/மரத் தளபாடங்கள்/மின்சார உபகரணங்கள் போன்ற பொருட்களில் ஒன்றை வாங்க வேண்டும், அல்லது
- ஒரு தொகைப் பணத்தைச் செலுத்த வேண்டும் அல்லது வைப்புச் செய்ய வேண்டும், அல்லது
- இணையத்தளம் அல்லது வேறு வழிகள் மூலமாக சில சேவைகளை அளிப்பதற்கு பதிவு செய்ய வேண்டும், அல்லது
- இத்திட்டத்தில் இணைவதற்கு மற்றவர்களை சேர்த்தல் வேண்டும்.

★ இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்தல் என்பன வங்கித்தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும்.

## இந்த வகையான திட்டங்களில் சேர்வதற்காக பங்கேற்பவர்கள் எவ்வாறு கவரப்படுகிறார்கள்?

★ நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம், "சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000இனைப் பெறுதல்") அல்லது "வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை", "இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்" போன்ற உறுதிமொழிகள் ஊடாக கவரப்படுகின்றார்கள்.

* அத்தகைய வருமானங்கள், தரகுகள்/பயன்கள் பொதுவாக பின்வருவனவற்றில் ஒன்றுடன் அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டவையுடன் இணைந்திருக்கும்.
  - பங்கேற்பாளர்களால் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல்.
  - பங்கேற்பவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
  - பங்கேற்பவர்களினால் செலுத்தப்படும் பங்களிப்புக்கள்/முதலீடுகளினை அதிகரித்தல்.

## ஏன் இந்த வகையான திட்டங்கள் பொய்யானவையாகவும் ஏமாற்றுவனவாகவும் இருக்கின்றன?

* பொருட்களின் விற்பனையுடன் இணைந்துள்ள தடைசெய்யப் பட்ட திட்டங்கள் ஏமாற்றுபவையாகும். ஏனென்றால் அத்தகைய பொருட்கள்:
  - பங்கேற்பாளர்களுக்கு தரகுப் பணத்தை, திட்டம் கொடுப்பதற்கு ஏதுவாக பொதுவாக உயர்த்தப்பட்ட அல்லது அதிகளவு விலையில் விற்கப்படுகின்றன
  - அத்தியாவசியமான பொருட்கள் அல்ல. அதனால் அப்பொருட்களுக்கு கிரமமான சந்தைப்படுத்தலோ அல்லது இரண்டாந்தர சந்தைப்படுத்தலோ இல்லை
  - விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் அற்றவை
  - திட்டத்தில் இணைவதற்காக கட்டாயமாக வாங்கப்பட வேண்டியவை மற்றும்
  - மீண்டும் வாங்கும் கொள்கையை கொண்டிருக்கவில்லை (வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுநர் ஒருவரின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை)

* பங்குபற்றுவோரின் முக்கிய குறிக்கோள் திட்டத்தில் இணைவதன் மூலம் பலன்களை அடைவதே தவிர பொருட்களை உரிமையாக்குவதோ அல்லது பயன்படுத்துவதோ அல்ல.



* திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது

முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும். இதற்கான காரணம் என்னவென்றால் பங்குபற்றுவோரின் எண்ணிக்கை கேத்திர கணித ஏறுவரிசையில் (2,4,8,16,.................) விரிவாக்கம் அடைய வேண்டியதுடன் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கீழ் மட்டத்தில் உள்ள பங்குபற்றுவோரின் எண்ணிக்கை நாட்டின் சனதொகையை விடக் கூடியதாகவும் இருக்கும்.

- ★ ஊக்குவிப்பாளர்கள் மிகவும் உறுதியளிக்கும் விளக்கங்களை அளிப்பதன் மூலம் பங்கேற்பாளர்களை சேர்க்கும் கூட்டங்களை திறமையாகவும் நம்பிக்கை ஊட்டும் விதத்திலும் நடாத்துகின்றார்கள். இதனால், எதிர்பார்க்கக்கூடிய பங்கேற்பாளர்கள் இலகுவாக பணம் சம்பாதிக்கும் ஆசையை எதிர்வுகொள்ள முடியாமல் திண்டாடும் நிலைக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம்.
- ★ ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டங்கள் சுயதொழில் திட்டங்கள் எனவும் நீ கஷ்டப்பட்டு உழைத்தால் கூடிய தரகு வருமானங்களைப் பெறலாம் எனவும் காட்ட முனைகிறார்கள். அதன் அடிப்படையில் பங்கேற்பாளர்கள் குறுகிய காலப்பகுதியில் பெரும் பணக்காரராக வரும் பேராசைக்காரராக மாறுகிறார்கள்.
- ★ வரையறுக்கப்படாத அல்லது பெருமளவு எதிர்கால வருமானத்தை அல்லது பலன்களை குறுகிய காலத்தில் அடைய முடியுமென ஊக்குவிப்பாளர்கள் பங்கேற்பாளர்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றார்கள். இது நடைமுறைப்படுத்த முடியாததொன்று அல்லது சாத்தியமற்றதொன்றாகும்.
- ★ வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்பந்திக்கிறார்கள்.
- ★ செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.
- ★ இத்திட்டங்களில் இருந்து பெறக்கூடிய வருமானம் திட்டத்தின் விரிவாக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளதனால் அவ்வருமானத்தின் அளவை பங்கேற்பாளர் ஒருவர் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

## இந்த வகையான திட்டங்களில் பங்கேற்பதன் மூலம் எதிர்கொள்ளக்கூடிய இடர்பாடுகள் எவை?

- ★ இத்திட்டம் குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் நிச்சயமாக முறிவடையும். அநேகமாக புதிய பங்கேற்பாளர்களைக் கொண்ட பெரும்பான்மையான பங்கேற்பாளர்கள் எதிர்பார்த்த வருமானத்தை இழப்பதோடு மட்டுமல்லாமல் கூடுதலாக

விலைமதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களையும் வைத்திருக்க வேண்டியிருக்கும்.

★ வாக்குறுதி வழங்கப்பட்ட வருமானம் பெறும் வாய்ப்பு இல்லாமல் போவதால் இத்தகைய திட்டங்களின் முறிவுகள் நண்பர்கள்/அங்கத்தவர்களிடையே சச்சரவுகளை ஏற்படுத்தும்.

★ சில பங்கேற்பாளர்கள் இத்தகைய திட்டங்களில் சேர்வதற்காக கடன் வசதிகளை பெற்றிருக்கக்கூடும். அத்தகையவர்கள் திட்டம் முறிவடையும் தருணத்தில் அக்கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் போகும்.

★ 1988ஆம் ஆண்டு 30ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம் பிரிவு 83Cஇன் கீழ் பிரமிட் இயல்பைக் கொண்ட திட்டங்கள் இலங்கையில் சட்ட விரோதமானவையாகும்.

★ 1958ஆம் ஆண்டு 24ஆம் இலக்க அந்நிய செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் 2006ஆம் ஆண்டு 05ஆம் இலக்க பணம் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல்வாங்கல்கள் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்கள் ஆகலாம்.

## வங்கித்தொழில் சட்டம் பிரிவு 83Cஇன் கீழ் குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனைகள் எவை?

★ மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்:

- மூன்று வருடங்களுக்கு குறையாத சிறைத் தண்டனை, அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம், அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

★ மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது வேண்டுமென்றோ அல்லது தெரிந்து கொண்டோ புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை:

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச்சிறைத் தண்டனை, மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பங்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இரு மடங்கு என்பவற்றில் எது கூடியதோ அத்தொகையைக் கொண்ட அபராதம்.

## இத்தகைய சட்ட விரோத திட்டங்களுக்கு எதிராக பொதுமக்களின் பொறுப்பு என்ன?

- ★ இத்தகைய திட்டங்களில் சேராமல் இருப்பதுடன் சமூகங்களின் ஏனைய அங்கத்தவர்களையும் இத்தகைய திட்டங்களில் சேராமல் இருக்கும்படி அறிவுறுத்துதல்.
- ★ இத்தகைய திட்டங்களில் பங்குபற்றுதல் மூலம் இலகுவாக பணம் சம்பாதித்து பணக்காரனாக மாறலாம் என்பது நடக்க முடியாத ஒன்று என்பதனை விளங்கிக் கொள்ளுதல்.
- ★ அவர்களது சுற்றுவட்டாரங்களில் இத்தகைய திட்டம் ஏதாவது ஒன்று தொழிற்பாட்டில் இருந்தால் அண்மையிலுள்ள காவல் நிலையத்திற்கு அறிவித்தல்.

**பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும். எனவே இத்தகைய நேர்மையற்ற மற்றும் வஞ்சகமான திட்டங்களிலிருந்து பொதுமக்கள் விலகியிருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**

தடைசெய்யப்பட்ட திட்டங்களின் இயல்பு மற்றும் அத்தகைய திட்டங்களில் பங்குபற்றுதலினால் ஏற்படும் இடர்நேர்வுகள் என்பவற்றை பொதுமக்கள் முழுமையாக அறிந்துகொள்வதற்காக மேலேயுள்ள தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

**இலங்கை மத்திய வங்கி**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.

CMD-C170418

இலங்கை மத்திய வங்கியின் அச்சகம், இராஜகிரிய